**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண். 49/2026**

**பி.வா.சா.1**

சாட்சியின் பெயர் : கனகாம்பரம்
தகப்பனார் பெயர் : சின்னமணி
வயது :
தொழில் :
மதம் :
ஜாதி :
கிராமம் : வடமதுரை
தாலுகா : வேடசந்தூர்
மாவட்டம் : திண்டுக்கல்

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 22.07.2026ம் தேதி என்னால் சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**முன் விசாரணை**

நான் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி. நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் | தன்மை |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 01.12.2009 | தாவா சர்வே எண்.2390க்கான வரைபடம் -1 | சான்று நகல் **(பி.வா.சா.ஆ.1 ஆவணமானது உரிய அதிகாரமுள்ள அதிகாரியிடமிருந்து சான்றிட்ட நகலாக பெறவில்லை என்பதாலும், உரிய அலுவலர் மூலம் குறியீடு செய்யவேண்டும் என்பதால் மேற்கண்ட ஆவணம் குறியீடு** |

| | | | |
|---|---|---|---|
| | | | **செய்ய முடியாது என்று கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை செய்தார். மேற்கண்ட ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)** |
| பி.வா.சா.ஆ.2 | 19.02.2020 | தாவா சர்வே எண்.2390 க்கான UDR வரைபடம் -1 | கணினி நகல் **(பி.வா.சா.ஆ.2 ஆவணமானது உரிய அதிகாரமுள்ள நபரின் கையெழுத்து மற்றும் Approval இன்றி தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் என்பதால் குறியீடு செய்வதற்கு கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை செய்தார். மேற்கண்ட ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)** |
| பி.வா.சா.ஆ.3 | 02.02.2025 | பிரதிவாதிகளின் சொத்தான சர்வே எண்.2390/19 ல் வாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அகற்றப்பட்ட பகுதி உடன் காட்டக்கூடிய வரைபடம் (எண்ணிக்கை -2) | கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.4 | 31.08.1953 | 3ம் நபர்களிடம் இருந்து, வாதிகளின் தாவா A செடியூல் சொத்தின் முன் கிரையதாரரான ராஜகோபால் கிரையம் பெற்ற ஆவணம் | கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.5 | 02.06.1975 | பிரதிவாதிகளின் சர்வே எண்.2390/19 க்கான மூல | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | ஆவணம் (பாகப்பிரிவினை பத்திரம் - B செடியூலில் கண்ட சுந்தரபாண்டியன் பாகம்) | |
| பி.வா.சா.ஆ.6 | 11.08.1983 | பிரதிவாதிகளின் சர்வே எண்.2390/19 க்கான மூல ஆவணம் (சுந்தரபாண்டியன் என்பவர் ஒரு நவநீதம் என்பவருக்கு கொடுத்த கிரைய ஆவணம்) | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.7 | 01.03.1995 | பிரதிவாதிகள் ஒரு நவநீதம் என்பவரிடம் இருந்து சர்வே எண்.2390/19 யை கிரையம் பெற்ற கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.8 | --- | பிரதிவாதிகளின் பெயரில் உள்ள பட்டாக்கள் | கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.9 | 24.05.2010 | பழனி, கோட்டாட்சியர் அவர்களின் விசாரணை அழைப்பாணை | கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.10 | 24.01.2011 | திண்டுக்கல் காவல் கண்காணிப்பாளர் அவர்களின் விசாரணை அறிக்கை | அசல் |

பிராதை தள்ளுபடி செய்ய பிரார்த்திக்கின்றேன்.

**வேண்டுகோளின் படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**